بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 10/01/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பனூ ஃபஸாரா போர் நடவடிக்கை மற்றும் அப்துல்லாஹ் பின் அ(த்)தீக் அவர்களின் படையெடுப்பு ஆகியவற்றின் பின்னணியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

கடந்த குத்பாவுக்கு முன்புவரை பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த போர்கள் மற்றும் படையெடுப்புகள் பற்றிய குறிப்பு கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அதில் பனூ ஃபஸாராவுக்கு எதிராக நிகழ்ந்த ஒரு படையெடுப்பு பற்றிய குறிப்பும் இருந்தது.

பனூ ஃபஸாராவுக்கு எதிரான போர் நடவடிக்கையில் உம்மு கிர்ஃபா என்பவள் கொல்லப்பட்ட சம்பவமும் வரலாற்றில் காணக் கிடைக்கிறது. சில வரலாற்றாசிரியர்கள் இதை எவ்வாறு எழுதியுள்ளார்கள் என்றால் அதைப் பார்க்கும் போது அது உண்மைக்கு எதிரான சம்பவம் என்று தெளிவாக தெரிகின்றது.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவம் பற்றிய குறிப்பை மிகவும் ஆதாரத்துடனும், அழகிய முறையிலும் எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் இவ்வாறு எழுதுகிறார்கள்:**

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் படையெடுப்புக்கு பதிலாக இப்னு சஅது அவர்கள் எப்படிப்பட்ட ஒரு படையெடுப்பை குறித்து எடுத்துரைத்துள்ளார்கள் என்றால் அதில் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் அமீராக இருந்தார்கள். அதாவது இப்னு சஅது அவர்கள் இந்த படையெடுப்பில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பதிலாக ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை அமீராக எடுத்துரைக்கிறார்கள். அது பற்றிய விபரத்திலும் ஓரளவுக்கு கருத்து வேறுபாடு கொண்டவாறு பின்வருமாறு எழுதுகிறார்கள்; வாதியல் குராவுக்கு அருகில் குடியிருந்த பனூ ஃபஸாராவை கண்டிப்பதற்காக இந்த போர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவர்கள் முஸ்லிம்களுடைய ஒரு வியாபார குழுவின் மீது தாக்குதல் நடத்தி அனைத்து செல்வங்களையும் பொருட்களையும் பிடிங்கிக் கொண்டார்கள். குழப்பம் விளைவிக்கும் இக்கூட்டத்தின் உயிர்நாடியாக ஒரு கிழவி இருந்தாள். அவளுடைய பெயர் உம்மு கிர்ஃபா என்பதாகும். அவள் இஸ்லாத்தின் கடும் எதிரியாக இருந்தாள். அவள் போரில் பிடிக்கப்பட்டபோது ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் குழுவில் இருந்த கைஸ் எனும் ஒருவர் அவளை கொன்றுவிட்டார். இப்னு சஅது அவர்கள் இக்கொலை கதையை இவ்வாறு விவரிக்கிறார்கள்; ‘அப்பெண்ணுடைய இரு கால்களையும் இரு வேறு ஓட்டங்களில் கட்டினார்கள். பிறகு அந்த ஒட்டகங்கள் வெவ்வேறு திசைகளில் விரட்டியடிக்கப்பட்டன. அதன் விளைவாக அந்த பெண் இரண்டாகக் கிழிக்கப்பட்டு இரு துண்டுகளாக ஆக்கப்பட்டாள். அதற்குப் பிறகு அப்பெண்ணுடைய மகள் ஹஸ்ரத் சலமா பின் அக்வஃ (ரலி) அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டாள்.’ இதே கதையை ஓரளவுக்கு சுருக்கமாகவும் வேறுபாட்டுடனும் இப்னு இஸ்ஹாக் அவர்களும் எடுத்ரைத்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:** இச்சம்பவம் முற்றிலும் தவறானதும் அடிப்படையற்றதும், ஆதாரப்பூர்வமாகவும் அறிவுப்பூர்வமாகவும் இரு வகையிலும் கற்பனையாக புனையப்பட்டது என்பதும் நிரூபணமாகிறது.

அறிவுப்பூர்வமாக புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், ஒரு பெண் மீது கொலைப்பழி எதுவும் கிடையாது. அவள் கைது செய்யப்படுகிறாள்; பொறுமையாக கொல்லப்படுகிறாள். அதுவும் அறிவிப்பில் எடுத்துரைக்கப்பட்ட வழிமுறைப்படி அவள் கொல்லப்படுகிறாள். இஸ்லாமோ போர்க்களத்திலும் கூட பெண்ணை கொலை செய்வதை விட்டு கடுமையாக தடுக்கின்றது. அவ்வாறிருக்கும்போது இக்கொலை நடந்த முறையை பார்க்கும்போது இது முற்றிலும் இஸ்லாத்தை விட்டு விலகிய செயலாக உள்ளதை அறிய முடிகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் பெண்களை கொலை செய்யக்கூடாது என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஹதீஸில் வருகிறது; ஒரு சந்தர்ப்பத்தில் போர்க்களத்தில் எதிரி சமுதாயத்தின் பெண் ஒருத்தி கொலை செய்யப்பட்டுக் கிடந்தாள். அந்தப் பெண் எந்த சூழ்நிலையில் யாரால் கொலை செய்யப்பட்டாள் என்று தெரியவில்லை. அவ்வாறிருந்தும்கூட பெருமானார் (ஸல்) அவர்கள் அதைக் கண்டு கடும் கோபமுற்றார்கள். இதுபோன்ற செயல் இனிமேல் நிகழக்கூடாது என்று சஹாபிகளிடம் வலியுறுத்திக் கூறினார்கள். அவ்வாறே, பெருமானார் (ஸல்) அவர்கள் ஏதேனும் ஒரு படைப் பிரிவை வழி அனுப்பி வைக்கும்போதெல்லாம் பொதுவாக சஹாபிகளுக்கு அறிவுரை கூறும் போது, எந்த பெண்ணையும் குழந்தையையும் கொலை செய்ய கூடாது என்று அறிவுரை செய்வார்கள்.

இந்த அடிப்படை வழிகாட்டல்கள் இருக்கும்போது சஹாபிகளைக் குறித்து, அதுவும் சஹாபிகளில் பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டு நபராகிய ஸைது பின் ஹாரிஸா (ரலி) என்ற சஹாபியைக் குறித்து அவர்கள் ஒரு பெண்ணை இந்த வழிமுறைப்படி கொலை செய்தார்கள் என்றோ, கொலை செய்ய வைத்தார்கள் என்றோ இப்னு சஅது அவர்கள் எடுத்துக் கூறியிருப்பது ஒருபோதும் ஏற்கத் தகுந்தது கிடையாது. அறிவிப்பில் அந்த கொலைச் செயல் ஸைது அவர்களை நோக்கி சுட்டிக் காட்டப்படவில்லைதான்! இன்னொரு முஸ்லிமின் பக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆயினும் இச்சம்பவம் ஸைது அவர்கள் படைத்தளபதியாக இருந்த போது நிகழ்ந்ததாகும். ஆகவே எவ்வாறிருப்பினும் அதன் கடைசி பொறுப்பாளியாக ஸைது அவர்கள்தான் கருதப்படுவார்கள். ஸைது அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையை அறிந்திருந்தும்கூட இது போன்ற ஒரு விஷயத்திற்கு அவர்கள் அனுமதி கொடுத்தார்கள் என்று அவர்களைக் குறித்து கருதுவது ஒருபோதும் ஏற்கத் தகுந்தது கிடையாது.

இப்போது ஆதாரப்பூர்வமாக பார்ப்போம்! முதல் விஷயம் என்னவென்றால், இப்னு சஅது அல்லது இப்னு இஸ்ஹாக் ஆகியோர் இந்த அறிவிப்புக்கு எந்தவோர் அறிவிப்பாளர் தொடரையும் எடுத்து வைக்கவில்லை. எந்தவொரு நம்பத் தகுந்த அறிவிப்பாளர் தொடருமின்றி பெருமானார் (ஸல்) அவர்களின் தெளிவான வழிகாட்டலுக்கும் சஹாபிகளின் பொதுவான, பிரபல்யமான வழிமுறைக்கும் எதிராக இது போன்ற அறிவிப்புகள் இருக்கும் என்றால் அவற்றை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இரண்டாவது விஷயம் என்னவென்றால், மிகவும் நம்பத் தகுந்த ஹதீஸ் நூல்களான ஸஹீஹ் முஸ்லிமிலும், அபூதாவூதிலும் இதே சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றில் உம்மு கிர்ஃபா கொலை செய்யப்பட்ட சம்பவத்தைப் பற்றிய எவ்வித குறிப்பும் கிடையாது. அத்துடன் இன்னும் சில விவரங்களில் எடுத்துரைக்கப்பட்ட அறிவிப்புகளிலும் இப்னு சஅது போன்றோரின் கூற்றுடன் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது.

பொதுவான வரலாற்று அறிவிப்புகளை காட்டிலும் சஹீஹான ஹதீஸ்கள் நிச்சயமானதாகவும், ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும், அதிக நம்பகத்தன்மை கொண்டதாகவும், முன்னுரிமை பெற்றதாகவும் இருக்கின்றன. ஆகவே ஸஹீஹ் முஸ்லிம் மற்றும்

அபூதாவூதுடைய அறிவிப்புகளுக்கு முன்னால் இப்னு சஅது போன்றோரின் அறிவிப்புகளுக்கு எந்த முக்கியத்துவமும் கிடையாது. நாம் பின்வரும் விஷயத்தை கருத்தில் கொள்ளும்போது இந்த வேறுபாடு மிகவும் தெளிவாக தென்படுகிறது. அது என்னவென்றால், இப்னு சஅது மற்றும் இப்னு இஸ்ஹாக் ஆகியோர் தம் அறிவிப்புகளை எவ்வித அறிவிப்பாளர் தொடரும் இன்றி வெறுமனே எடுத்துரைத்திருக்கும் வேளையில் இமாம் முஸ்லிம் மற்றும் அபூதாவூத் ஆகியோர் தம் அறிவிப்புகளுக்கு முழுமையான அறிவிப்பாளர் தொடரை கொடுத்துள்ளார்கள். ஹதீஸ்களை தொகுக்க கூடியவர்கள் எந்த அளவு முன் எச்சரிக்கையுடன் செயல்படுகிறார்களோ அதற்கெதிரில் வரலாற்றாசிரியர்களின் பொதுவான அறிவிப்புகளுக்கு எவ்வித உண்மைத்துவமும் இருப்பதில்லை.

ஆகவே, உம்மு கிர்ஃபா என்ற பெண் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட சம்பவம் முற்றிலும் பொய்யானதும், அடிப்படையற்றதும் ஆகும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. அது மறைவான இஸ்லாத்தின் எதிரி மற்றும் முனாஃபிக்கின் தயவால் சில வரலாற்று அறிவிப்புகளில் இடம்பெற்றுள்ளது. உண்மை என்னவென்றால், இந்தப் போரைக் குறித்து முஸ்லிம் மற்றும் அபூதாவூதில் எந்த அளவு எடுத்துரைக்கப்பட்டுள்ளதோ அதை விட அதிகமாக வேறு ஒன்றும் கிடையாது!

**அபூ ராஃபி என்பவனை நோக்கி அனுப்பப்பட்ட அப்துல்லாஹ் பின் அதீக் என்பவரின் போர் நடவடிக்கை குறித்தும் வரலாற்றில் குறிப்பு காணப்படுகிறது.** இந்த போர் நடவடிக்கை ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ரமலான் மாதம் நிகழ்ந்ததாக இப்னு சஅது எழுதியிருக்கிறார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்கள்:** எந்த யூத தலைவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக குழப்பங்களையும் எதிர்ப்புகளையும் தூண்டிவிட்டார்களோ, அதன் காரணமாக அகழ்ப் போர் எனும் கடுமையான குழப்பம் ஏற்பட்டதோ, அதில் ஹுயய் பின் அக்தப் என்பவன் பனூ குறைஸாவுடன் தன் தீய முடிவை அடைந்து விட்டிருந்தான். ஆனால் அபூ ராஃபி என்ற பட்டப்பெயரால் அழைக்கப்பட்ட சலாம் பின் அபூ ஹுகைக் என்பவனோ கைபர் பகுதியில் சுதந்திரமாக உலாவிக் கொண்டு குழப்பத்தை ஏற்படுத்துவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். எந்த அளவுக்கென்றால், அகழ்ப் போரின் இழிவான தோல்வியும், பனூ குறைஸாவின் பயங்கரமான முடிவும் அவனுடைய பகைமையை இன்னும் அதிகமாக்கி இருந்தது. கத்ஃபான் கோத்திரத்தார்களின் குடியிருப்பு கைபருக்கு அருகில் இருந்தது. இவ்வாறு கைபருடைய யூதர்களும் நஜத் கோத்திரத்தார்களும் அக்கம் பக்கத்தார்களாக இருந்தார்கள். மிகப்பெரும் வியாபாரியாகவும் செல்வந்தனாகவும் இருந்த அபூ ராஃபி நஜதில் இருந்த கொடிய, போரிடக்கூடிய கோத்திரங்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டி விடுவதை வழக்கமாக கொண்டிருந்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் மீதான பகைமையில் அவன் கஅப் பின் அஷ்ரஃபை முழுமையாக ஒத்திருந்தான்.

ஆகவே, இறுதியில் அவன் ஒரு சதித் திட்டம் தீட்டினான். அகழ்ப் போருக்காக செய்தது போன்று நஜதுடைய ஃகத்ஃபான் கோத்திரங்களிலும் மற்ற கோத்திரங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முஸ்லிம்களை அழிப்பதற்காக ஒரு மாபெரும் படையை ஒன்று திரட்ட ஆரம்பித்திருந்தான். அகழ்ப்போருக்கு பிறகு மீண்டும் தாக்குதல் நடத்த அவன் ஒரு படையை ஒன்று திரட்ட ஆரம்பித்திருந்தான். நிலைமை இந்த அளவு வந்த பிறகு முஸ்லிம்களுடைய கண்களுக்கு முன்னாலும் அகழ்ப் போருடைய அதே காட்சிகள் சுழழ ஆரம்பித்தன. நாட்டில் பரந்த அளவில் இரத்த ஆறு ஓடுவதற்கு பதிலாக ஒரு குழப்பவாதி கொல்லப்படுவது எவ்வளவோ சிறந்தது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சிந்தித்த பிறகு அப்துல்லாஹ் பின் அத்தீக் அன்சாரி அவர்களின் தலைமையில் கஸ்ரஜ் குலத்தைச் சேர்ந்த நான்கு சஹாபிகளை அபூ ராஃபியை நோக்கி அனுப்பி வைத்தார்கள். வழியனுப்பும்போது அவர்களிடம், எந்த ஒரு பெண்ணையோ குழந்தையையோ

ஒருபோதும் கொலை செய்யக் கூடாது என்று வலியுறுத்திக் கூறினார்கள். ஆகவே, ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டில் ரமலான் மாதத்தில் இந்தக் குழு புறப்பட்டது. மிகவும் சாதுரியமாக தன் வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்தது. இவ்வாறு இந்த துன்பத்தின் மேகம் மதீனாவை விட்டு விலகியது.

அபூ ராஃபியை கொலை செய்த பிறகு அவனுடைய வீட்டு ஏணிப்படியை விட்டு வேகவேகமாக இறங்கும்போது அப்துல்லாஹ் பின் அத்தீக் அவர்களின் கால் உடைந்துவிட்டது. இன்னோர் அறிவிப்பில் கால் இணைப்பு விலகி விட்டதாக வருகிறது. அவர்களே இதைக் குறித்து கூறுகிறார்கள்: நாங்கள் மதீனாவுக்கு வந்து பெருமானார் (ஸல்) அவர்களிடம் அபூ ராஃபி கொல்லப்பட்ட செய்தியைக் கூறினோம். அன்னார் அனைத்து விபரங்களையும் கேட்டறிந்த பிறகு என்னிடம், உன்னுடைய காலை நீட்டு என்று கூறினார்கள். நான் என் காலை நீட்டினேன். அப்போது அன்னார் துஆ செய்தவாறு அதில் தம் அருளுக்குரிய கரத்தால் தடவிவிட்டார்கள். என்னுடைய கால் குணமடைந்து ஒருபோதும் நோய் காணாதது போல் அது மாறிவிட்டது.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அபூ ராஃபி கொல்லப்பட்டது சரியானதுதான் என்பதைக் குறித்து நாம் இங்கு எவ்வித விவாதத்தையும் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. அபூ ராஃபி கொல்லப்பட்ட சம்பவம் வரலாற்றில் ஒரு திறந்த புத்தகமாக உள்ளது. அவ்வாறான சூழ்நிலையில் சஹாபிகள் செய்தது முற்றிலும் சரியானதும், பொருத்தமானதும் ஆகும். போரின் போது ஒரு சமுதாயம் வாழ்வா மரணமா என்ற நிலையை கடந்து கொண்டிருக்கும் போது இது போன்ற திட்டங்கள் முற்றிலும் ஆகுமானதாகக் கருதப்படுகின்றன. ஒவ்வொரு சமுதாயமும் ஒவ்வொரு கோத்திரமும் தேவைக்கேற்ப ஒவ்வொரு காலத்திலும் இது போன்ற விஷயங்களை மேற்கொள்கின்றன. ஆனால் பரிதாபம் என்னவென்றால் ஒழுக்க சீர்கேடு மிகுந்த இக்காலத்தில் குற்றவாளியுடன் அனுதாபத்தோடு நடந்து கொள்வது எந்த அளவு ஆகுமானதாக ஆகிவிட்டது என்றால் ஓர் அநியாயக்காரன்கூட ஹீரோவாக ஆகி விடுகின்றான். அவன் செய்த குற்றங்களின் காரணமாக அவனுக்கு கிடைக்கும் தண்டனைகள் பொதுமக்களுடைய அனுதாபத்தை ஈர்க்கக் கூடியதாக ஆகிவிடுகின்றன. அவனுடைய குற்றங்களை மக்கள் மறந்து விடுகிறார்கள். ஆனால் இஸ்லாத்தைப் பொறுத்தவரை ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் என்னவென்றால், அது இந்த பொய்யான உணர்வுகளுக்கு மார்க்கத்தில் இடம் அளிப்பதில்லை. அது குற்றவாளியை குற்றவாளி என்றே கூறுகிறது. குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனையை நாட்டுக்கும் சமூகத்திற்கும் அருளாகக் கருதுகின்றது. அழுகிப்போன ஓர் உறுப்பை உடலில் இருந்து வெட்டி விட வேண்டும் என்று போதிக்கிறது. அழுகிப்போன உறுப்பு ஆரோக்கியமான உறுப்புகளை சீர் கெடுப்பதை அது ஆதரிப்பதில்லை.

தண்டனை கொடுக்கப்பட்ட முறையைப் பற்றி நாம் பார்ப்போம் என்றால், அதைக் குறித்து ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அரேபியாவின் அப்போதைய சூழ்நிலைக்கேற்ப, முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் இருந்த போர்ச் சூழலுக்கு ஏற்ப அந்த வழிமுறை மேற்கொள்ளப்பட்டது. பொது மக்களின் அமைதியை கருத்தில் கொண்டு பார்க்கும்போது அதுவே சிறந்த, பொருத்தமான வழிமுறையாக தென்படுகிறது.

ஆகவே எவ்வாறு இருப்பினும் இந்த சம்பவங்கள் இனிமேலும் தொடரும் இன்ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)